1. “நான் இவ்வளவு காலமும் சுமந்த சுமைகளையும், போலிகளால் நிறைந்த வாழ்க்கையையும் இறக்கி வைத்தது, என்னுடைய குடும்பத்தார் ஏற்றுக்கொண்டதன் பின்னரே“ – ஏஞ்சல்

2. “என்னுடைய எட்டு வயதில் எனக்கு உண்டான குழப்பம் எனது பெண்மையை உணர்த்தியது. ஓருடல் ஈருயிராய் இருப்பதென்பது நான் அனுபவித்த காலக்கொடுமை“ என்கின்றாள் ஏஞ்சல்.

3. “ரியூசனுக்கு எண்டு தாற காசுகள சேர்த்து இந்த மாத்திரைகளை வாங்கிறனான் “ என்கின்றாள் ஏஞ்சல்.

4. “ நான் ஆரம்பத்தில நிறைய அடிவாங்கியிருக்கிறன். அப்பா பேசுவார். எனக்கு அடிச்சத விட என்ர அம்மாவப் போட்டு அடிப்பார் என்கின்றார் ஏஞ்சல்.

5. “ எனக்கு தலைமுடி வளர்க்க நல்ல விருப்பம். ஆனா, வீட்ட எல்லாரும் முடியை வெட்டு, என்ன பொம்பிளையள போல வளக்கிற எண்டு பேசிக்கொண்டே இருப்பினம்“ எனக்கூறும் ஏஞ்சல் அந்த நேரங்களில வீட்டிலயும் நிம்மதி இல்ல வெளியாலயும் நிம்மதி இல்ல“ - ஏஞ்சல்

6. “றோட்டால போகேக்க அலி, பெட்டை, பொன்ஸ், ஒன்பது எண்டெல்லாம் கூப்பிடுவாங்க“ – ஏஞ்சல்

7. “ நான் திருநங்கை எண்டதால என்னப் பற்றி கேக்க யாரும் இல்லை எண்டு நிறைய தடவ நிறைய ஆண்கள் சேர்ந்து அடிப்பாங்கள், நான் கதறி அழுதிருக்கிறன். எனது சமூகத்திலுள்ள ஒரு சிலரால் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் ஆளாகியிருக்கிறன்….“ – ஏஞ்சல்

8. “ஏன் நீயெல்லாம் இருக்கிற, இதெல்லாம் அவமானம் எண்டு என்ன பாத்து சமூகத்தில இருக்கிறவங்க சொல்லேக்க கடலுக்க விழுந்து சாவமா என்டெல்லாம் நினைச்சிருக்கிறன்“ - ஏஞ்சல்

9. “என்னை சிறுவயதிலிருந்து இரத்த உறவில்லாத ஒரு அம்மம்மாதான் வளர்த்தாங்க. அதனால என்ர வீட்டில ஏதாச்சும் பிரச்சினை எண்டா அம்மம்மா

வீட்ட போயிடுவன். அங்க ஏதாவது பிரச்சினை எண்டா என்ர வீட்ட போயிடுவன்“ – ஏஞ்சல்

10.“ஒரு முறை என்ர அக்காவ பெண் பார்ப்பதற்காக மாப்பிள்ளை வீட்டார் வரேக்க, கெதியா சாப்பிடு … சாப்பிட்டு உள்ளுக்க போ, வெளியில வராத“ எண்டு சொல்லும் போது நான் உடைஞ்சிட்டன்“

11.“நான் இத்தனை காலமும் அழுத கண்ணீருக்கு முற்றுப்புள்ளி வைச்சதப் போல Certificate கிடைச்சுது. இதில என்ர பெயர் ஏஞ்சல் எண்டு வந்திச்சு. பொம்பிள பிள்ளையின்ர பேரோட இருக்கிறதால நான் உயர்தரப் பரீட்சையை இரண்டாந்தரம் எடுக்க விரும்பினன். படிப்ப பயன்படுத்தி திருப்ப வீட்ட வந்தன்“ – ஏஞ்சல்

12.‘கொழும்பில இருக்கேக்க நிறைய அழுதிருக்கிறன். சாப்பாட்டுக்கே வழியில்லாமல் இருந்திருக்கிறன். பசியில சுருண்ட போய் படுத்திருக்கிறன். சில நேரங்களில் நோன்புப் பெருநாள் சாப்பாடும் என் வயிற்றை நிரப்பியிருக்கின்றன“- ஏஞ்சல்

13.“முழுமையா “ஆண்” என்ற போர்வையை உடலிலிருந்தும், உள்ளத்திலிருந்தும் கழற்றி வீசி பெண்மையை அணிந்த அந்த நிமிடத்த என்னால் மறக்க ஏலாது. எல்லாம் முடிஞ்சு வெளியால வரேக்க சந்தோசத்தில ஒரு வலியும் தெரியேல. அந்த நாளுக்காக எத்தனையோ நாட்கள் ஏங்கியிருக்கிறன். என்ர வாழ்க்கையின்ர ஒரு இலட்சியம். உண்மையில வார்த்தைகளால சொல்லவே முடியாது“ – ஏஞ்சல்

14.‘அப்ப கொரோனா வந்த நேரம். வெளியால போக முடியாது. தலைமுடி நிறைய வளர வேணும் எண்டு நினைச்சு வெட்டிட்டன். அப்ப வீட்ட இருக்கிறவ ஏன் முடிய வெட்டுற எண்டு கேட்டிச்சினம். அப்ப எனக்கு நல்ல சந்தோசம். ஏனென்டா, முதல் முடிய வெட்டு, வெட்டு எண்டு சொல்லுவாங்கள். இப்ப ஏன் வெட்டுற எண்டு கேட்கினம்“ - ஏஞ்சல்

15.“எங்கட அத்தான் கொழும்பு மாவட்டத்தில் இருந்தமையால் திருநங்கைகள் குறித்து அறிந்திருந்தார். அவருக்கு என்னைப் பற்றிய புரிந்துணர்வு இருந்தது. அவளை எல்லோரும் ஆம்பிள பிள்ளையின்ர பேரில கூப்பிடாம அவளுக்கு விரும்பின மாதிரி ஏஞ்சல் எண்டு கூப்பிடுங்கோ எண்டு சொல்லுவார்“ – ஏஞ்சல்

16.“இப்போதெல்லாம் எனக்கு சாறிகளை அம்மாவே உடுத்தி விடுவார். தலை பின்னி அழகு பார்ப்பார். அக்கா என்னுடைய அடைகளைத் தைத்துத் தருவாள்“ எனக் கூறுகின்றாள் ஏஞ்சல். (CQ_Source Sheet) “ இப்போது அயல் வீட்டு அக்காமார் எனக்கு சாப்பாடு தருவார்கள். தலைக்கு எண்ணெய் வைத்து விடுவார்கள். இதெல்லாம் என்னை அவர்களும் ஏற்கத் தொடங்கியிருக்கின்றார்கள் என்பதற்கான அடையாளம்“ என்கின்றாள் ஏஞ்சல்.

17.“எப்போதும் எது வேண்டுமென்றாலும் நடக்கலாம். திடீரென நான் என்னை மாற்றியதால், சமூகத்தில் உள்ளவர்களும் உடனெ மாற வேண்டும் என நினைப்பது தவறு. மெதுவாக மாறட்டும். இன்னும் காலங்கள் இருக்கின்றன. நான் யாருக்கும் என்னைப் பற்றி விளங்கப்படுத்துவது இல்லை. அது என்னுடைய வேலையும் இல்லை“
– ஏஞ்சல்